JANUARY 2025

www.balamandir.org

மலர்-1 இதழ்-10

MALARUM MOTTUKKAL

பால மந்திர் கின்ஷிப் கேர் (KINSHIP CARE) செய்திமடல்

மலரும் மொட்டுக்கள்

கார்த்திகை தீபம்:



13/12/2024 அன்று பால மந்திரில் கார்த்திகை தீப பண்டிகையானது கொண்டாடப்பட்டது. பால மந்திர் முழுவதும் களிமண் தீபம் ஏற்றி குழந்தைகள் இதை கொண்டாடினர். தீப ஒளியில் வெளிச்சதால் பால மந்திர் அன்று இரவு முழுவதும் மிகவும் பிரகாசமாகவும் காணப்பட்டது. இதனால் குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தனர்.

கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்:





பால மந்திரில் **25/12/2024** அன்று கிறிஸ்துமஸ் கொண்டாடப்பட்டது. பால மந்திர் இல்லம் முழுவதும் வண்ணமயமான விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. குழந்தைகள் கிறிஸ்து பிறப்பை நாடகமாக நடித்தினர். பின்னர் பாலமந்திரில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன அன்றைய நாளை குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சியுடன் கழித்தனர்.

ஆண்டு விழா - MNC FOR EXCEPTIONAL CHILDREN:

பால மந்திர் மதுரம் நாராயணன் மையம் **1989** ஆம் ஆண்டில் நிறுவுப்பட்டதிலிருத்த கடந்த **34** ஆண்டுகளில் **5200** க்கும் மேற்பட்ட குறைபாடுகள் கொண்ட குழந்தைகளை நிர்வகிப்பதில் பெற்றோருக்கு ஆலோசனை வழங்கி வருகிறது **(**பிறந்த குழந்தை முதல் ஆறு வயது வரை**).** இதனைத் தொடர்ந்து டிசம்பர் மாதம், தனது **35** வது ஆண்டு துவக்க விழாவானது கொண்டாடியது. இந்த விழாவின் சிறப்பு விருந்தினராக மெரிடியன் குளோபல் வென்ச்சர்ஸ் நிறுவனத்தின் தலைவரும், 'கோ கலர்ஸ்' -ன் இணை நிறுவனருமான திரு.வினோத் சரோகி கலந்து கொண்டார்.

உங்கள் சமூகப் பணியாளரைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.



திரு. கோபாலகிருஷ்ணன் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தை பூர்விகமாக கொண்டவர். இவர் கணினி அறிவியல் இளங்கலை பட்டம் **(B.Sc Computer Science)** மற்றும் சமூகப் பணியில் முதுகலை பட்டம் **(MSW)** பெற்றுள்ளார். பிப்ரவரி மாதம் **2024** முதல் பால மந்திர் அறக்கட்டளையின் கின்ஷிப் கேர் திட்டத்தில் சமூகப் பணியாளராக சேர்ந்து கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள **65** குடும்பங்களை சேர்ந்த **99** குழந்தைகளை கவனித்து வருகிறார். இவர் பயணம் செய்வதில் மிகுந்த ஆர்வமும், விலங்குகளின் மீது மிகுந்த அக்கறையும் கொண்டவர். இன்றைய சூழ்நிலையில் அழிந்து வரக்கூடிய உயிரினங்களில் ஒன்றான யானைகளின் மீது மிகுந்த பிரியம் கொண்டவர்.

கின்ஷிப் கேர் -காஞ்சிபுரம் :



காஞ்சிபுரத்தில் நடந்த பிரம்மாண்ட புத்தக கண்காட்சியில் காஞ்சிபுரம் கின்ஷிப் கேரை சேர்ந்த **25** குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் சமூக பணியாளர் பெஞ்சமினுடன் கலந்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சி குழந்தைகளுக்கு பல்வேறு வகையான புத்தகங்களை பற்றி தெரிந்து கொள்ள ஒரு சிறந்த வாய்ப்பாக இருந்தது மற்றும் வாசிப்பு மீதான ஆர்வத்தைத் தூண்டியது.



குழந்தைகள் ஸ்டாலை (STALL) சுற்றித் திரிந்தபோது, வாசிப்பை தங்கள் வாழ்க்கையின் ஒரு வழக்கமான செயலாக வைக்கப் போவதாக சில குழந்தைகள் கூறினர். அறிவுத்திறனை வளர்ப்பதிலும், சிந்தனைத் திறன்களை அதிகரிப்பதிலும், புத்தகங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கு ஒரு தளமாக இந்த புத்தகக் கண்காட்சி அமைந்தது.

குழந்தைகள் மட்டுமல்ல பெற்றோர்களும் இந்த புத்தக கண்காட்சியில் ஆர்வத்துடன் பங்கேற்றனர் இதன் மூலம் மற்ற பெற்றோர்களுடன் பழக ஒரு வாய்ப்பு கிடைத்தது மற்றும் அர்த்தமுள்ள ஒரு செயலின் மீது தங்களை ஈடுபடுத்திக் கொள்ள ஒரு அனுபவம் கிடைத்தது என்று சிலர் பகிர்ந்து கொண்டனர்.



ஹேப்பி ரீடிங் (HAPPY READING):

பால மந்திர் - கின்ஷிப் கேர்:

டிசம்பர் **2024** நிலவரப்படி, சென்னை மற்றும் கோயம்புத்தூர் மையங்களில் **828** குடும்பங்களும் **1454** குழந்தைகளும் கின்ஷிப் கேர் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளனர். இவர்கள் அனைவரும் பால மந்திரின் பல்வேறு சேவைகளால் பயனடைந்து வருகின்றனர்.

ஆங்கிலம் சரளமாக படிக்க குழந்தைகளுக்கு உதவும் ஒரு பயனுள்ள திட்டம் 'ஹேப்பி ரீடிங்' திட்டமாகும். இதில் குழந்தைகள் தன்னார்வலர்களுடன் ஆங்கிலத்தில் உரையாட முயற்சிக்கும் போதும், கற்றுக் கொள்ளும் போதும் அவர்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கிறது. இதனால் அவர்கள் ஆங்கிலம் எளிதாக படிக்கவும், உரையாடவும் முடிகின்றது. இதன் பயனாக குழந்தைகள் ஆர்வத்துடன் ஆங்கில பேச்சுப் போட்டியில் பங்கேற்பதைக் காண முடிகிறது. தற்போது கின்ஷிப் கேர்-ல் **266** குழந்தைகள் ஹேப்பி ரீடிங் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

ஹேப்பி ரீடிங் ஃபவுண்டேஷன் (HRF):

2 ஆம் மற்றும் **3** ஆம் வகுப்பு படிக்கும் குழந்தைகளுக்காக ஹேப்பி ரீடிங் ஃபவுண்டேஷன் வகுப்புகள் நடக்கிறது. ஒலியியல், வார்த்தைகளை உருவாக்குதல் மற்றும் மொழியின் அடிப்படைக் கருத்துக்கள் கற்பிக்கப்படுகிறன. குழந்தைகள் ஒவ்வொரு வாரமும் வகுப்புகளுக்கு ஆவலுடன் காத்திருந்து ஆர்வத்துடன் பங்கேற்கிறார்கள். தற்போது **76** குழந்தைகள் இந்த வகுப்பில் கலந்து கொள்கிறார்கள்.



ஹேப்பி ரீடிங் தமிழ் (HAPPY READING TAMIL):



ஒரு மொழி கற்க அதன் அடிப்படை தான் அவசியம், அதனை வலுப்படுத்தும் வகையில் தமிழ் எழுத, படிக்க சிரமப்படும் சில குழந்தைகளுக்கு தமிழ் வகுப்புகள் நடைபெறுகின்றன. இந்த வகுப்புகளில் மூலம் குழந்தைகளிடம் நல்ல முன்னேற்றம் தெரிந்திருக்கிறது. சமீபத்தில் **11** குழந்தைகள் ஹேப்பி ரீடிங் தமிழ் வகுப்புகளில் கலந்து கொண்டு வருகிறார்கள்.

கை மேல் கல்வி (KAI MEL KALVI):

ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கு கை மேல் கல்வி வகுப்புகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த வகுப்புகளில் செயல்பாடு வழி கற்றல் மூலம் கணிதம் கற்பிக்கப்படுகிறது. இது கணிதப்பாடத்தில் சிரமப்படும் குழந்தைகளுக்கு அதனை எளிதில் புரிந்து கொள்ள உதவும், அதற்கான செயல்பாடுகள் மற்றும் பயிற்சி கணக்குகள் குழந்தைகளுக்கு





கொடுக்கப்பட்ட டேப்கள் **(Tab)** மூலம் பயிற்சி செய்யப்படுகிறது. வாரம் முழுவதும் அவர்களை வழி நடத்துவதற்காக ஒரு வழி காட்டியாளரும் உதவி புரிவார். குழந்தைகள் வகுப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு அதில் ஆர்வத்துடன் பங்கேற்கிறார்கள். தற்போது **73** குழந்தைகள் வகுப்பில் கலந்து கொள்கிறார்கள்.

ஆஹா குரு அட்வான்ஸ் கோச்சிங் (ADVANCED COACHING):



ஏழு மற்றும் எட்டாம் வகுப்பில் அதிக செயல்திறன் மற்றும் படிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் பால மந்திர் ஆஹா குருவுடன் ஒன்றிணைந்து அட்வான்ஸ் கோச்சிங் வகுப்புகளை நடத்திவருகிறது. இந்த வகுப்புகள் குழந்தைகள் மேற்படிப்பிற்க்கான நுழைவு தேர்வுகளை எதிர்கொள்ள உதவியாக இருக்கும். இந்த வகுப்பில் கலந்து கொள்ளும் குழந்தைகளுக்கு ஆஹா குருவின் தளத்தை எளிதாக பயன்படுத்த மடிக்கணினி மற்றும் **Tabs** பால மந்திரால் வழங்கப்பட்டுள்ளது. தற்போது **20** குழந்தைகள் இந்த வகுப்பில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

Education is a journey of race - try to push yourself up and not to push someone down

என்.எம்.எம்.எஸ் பயிற்சி (NMMS):



பெங்களூரைச் சேர்ந்த தன்னார்வலர் தொண்டு நிறுவனமான சாத்தி **(Saathi)** உடன் இணைந்து பால மந்திர் அரசுப் பள்ளிகளில் படிக்கும் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி உதவித்தொகை தேர்வு **(NMMS)** சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்திவருகிறது. இதன் பலனை அடைய கின்ஷிப் கேரை சேர்ந்த அரசு பள்ளியில் படிக்கும் **6** குழந்தைகள் வாரத்தின் **7** நாட்களும் ஆன்லைன் வகுப்புகளில் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர்.

பெற்றோருக்கான கின்ஷிப் கேர் சேவைகள்:

தேவை அடிப்படையிலான ஆலோசனை:



- வாழ்க்கையில் ஏற்படும் சில கடினமான சூழலை கையாள்வதற்கு சில சமயங்களில் நமக்கு அறிவு சார்ந்த அறிவுரைகளும் உதவிகளும் தேவைப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் நாம் ஒரு ஆலோசகரிடம் இருந்து உதவியைப் பெறலாம்.
- பயனாளிகள் அனுபவித்த அதிர்ச்சியை பால மந்திர் புரிந்துகொண்டு, மேலும் ஆலோசனை மூலம் வாழ்க்கையில் முன்னேற உதவுகிறது. இதற்காக சென்னையில் ஆலோசகர் திருமதி. சுஜாதா மற்றும் கோயம்புத்தூரில் ஆலோசகர் திருமதி. வானதி அவர்களும் கின்ஷிப் கேர் பெற்றோர்களுக்கு தேவையின் அடிப்படையில் குழு ஆலோசனையும் தனிப்பட்ட ஆலோசனையும் வழங்கி வருகின்றனர்.

> Education is the movement from darkness to light

ஆரம்பகால பெற்றோருக்குரிய வழிகாட்டல்கள்:



நம் அனைவரின் வாழ்க்கையிலும் பிறந்ததில் இருந்து **6** வயது வரை மிகவும் முக்கிய காலக்கட்டம் ஆகும். அவை ஒருவரின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைக்கின்றது. இந்த ஆரம்ப கால முக்கியத்துவத்தை அறிந்து, கின்ஷிப் கேர் ஆரம்பகால பெற்றோருக்கான வழிகாட்டல்களை வழங்கி வருகிறது.

தற்போது இதன் மூலம் **198** பெற்றோர்கள் பயனடைந்து வருகின்றனர்.

பெற்றோருக்கான பகுதி - PARENTS' CORNER

- குழந்தைகளின் வளர்ச்சியில் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு தூக்கமும் ஓய்வும் மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஆழ்ந்த தூக்கம் உடல் வளர்ச்சிக்கு அவசியமாகும். தூக்கம், இழந்த ஆற்றலை திரும்ப பெற உதவுகிறது, குழந்தைகள் சுறுசுறுப்பாக இருக்கவும், கற்றுக்கொள்ளவும், அன்றாட நடவடிக்கைகளில் திறம்பட ஈடுபடவும் உதவுகிறது.





- அறிவாற்றல் வளர்ச்சி, நினைவாற்றலை மேம்படுத்துதல், உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்துதல், மனக்கிளர்ச்சி நடத்தையை கட்டுப்படுத்துதல் ஆகியவற்றிற்கும் தூக்கம் மிகவும் அவசியம். போதுமான தூக்கம் மற்றும் ஓய்வு அவர்களின் நோயெதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துகிறது, இது நோய்கள் மற்றும் தொற்றுநோயை எதிர்த்துப் போராட உதவுகிறது.
- சரியான அளவு ஓய்வெடுப்பதால் குழந்தைகள் பள்ளியில் சிறப்பாக செயல்பட முனைகிறார்கள்.

YOUNG ACHIEVERS



நேத்ரா ஸ்ரீ (காஞ்சிபுரம்)
எஸ் ஆர் டி எஸ் சோப் கார்விங்.



லக்ஷிதா (காஞ்சிபுரம்)
கையெழுத்துப் போட்டி



ஜெய்பிரகாஷ் (காஞ்சிபுரம்)
பேச்சுசு போட்டி



பவதர்ஷினி (காஞ்சிபுரம்)
கையெழுத்துப் போட்டி



பவனேஷ்
(காஞ்சிபுரம்)ஆங்கில
பேச்சுப் போட்டி



ஜீவிதா (காஞ்சிபுரம்)
கோலம் போட்டி



டி.விஷ்ணுபிரியன் (சேலம்)
சதுரங்கப் போட்டி



அஃப்ரா சித்தீக்கா (சென்னை)
ஸ்பாட் பெயிண்டிங்.



முகமது அஜ்மல் (சென்னை)
கராத்தே.

YOUNG ACHIEVERS



பூர்வவ் ஷ்ரேஜித் எம்.பி
(சென்னை)
சிறந்த மாணவருக்கான பரிசு.



தன்விகா(வேலூர்)- ஆடை
போட்டியில் முதல் இடம்.



திருக்குமரன் (திருவள்ளூர்)
சொற்கள் விளையாட்டில்
முதலிடம்..



சஞ்சய் (வேலூர்)
ஓவியப் போட்டியில்
முதலிடம்.



கவுசிகா (திருப்பூர்) மாநில
அளவிலான ஹாக்கி
போட்டியில் இரண்டாம் இடம்.



ஜீவிதா - (காஞ்சிபுரம்)
பேச்சுப்போட்டி.



மோனிஷா (திருவள்ளூரை) கீதா
பாராயணப் போட்டியில் 2 ஆம்
இடம்

மேலும் பல செயல்பாடுகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!